உ

கணபதிதுணை.

பாலையானந்தசுவாமிகள்

அருளிச்செய்த

# சச்சிதானந்த மாலை.

இஃது,

சரவணபுரம்

**சண்முகமுதலியாரால்**

பார்வையிடப்பட்டு.

பாக்குபேட்டை

**மதுரை முதலியாரால்**

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

துந்துபி ௵ ஆவணி ௴.

# சச்சிதானந்தமாலை.

(காப்பு.)

முச்சுடராகி யொன்றாய் முடிந்ததோர் சோதி பாதம், அச்சுதனயனுங்காணா வகண்டமா யளவிலாத, சச்சிதானந்தஞான சதாசிவகுருவைப்பாட, மெய்ச்சுடருதயமான விளக்கொளி யுண்மைசெய்வாம்.................................... *

கண்ணுக்குண் மணியாய்நின்ற காரணகுருவைப் போற்றி, விண்ணுக்கு ளொளியைப் பார்த்து மெய்ப்பொருள் விளக்கமாக, மண்ணுக்குளெவர்க்குஞான வழிதனையுணர்ந்தோர்க் கெல்லாம், ஒண்ணுக்குளொன்றாய்நின்ற வுண்மையை யுரைக்கலுற்றேன்.................................... *

முத்தமாய்நின்றபர நாதவொலி இதமொரு முச்சந்திவீதிநடுவின், மும்மலமகற்றிவெளி நிர்மல சொரூபமாய் முச்சுடரினுச்சிமுடிவில், உத்தமா தேசிபரி சித்தமாயஷ்டதிசை யூடாடிவெட்ட வெளியில், ஒளியாகிவிரிசுடரி னுதயகிரி யணையிலே யொருநாளுமிருநாளுடன், நித்தமாய்நின்றபரிபூரணசதாசிவ நிலைகொண்டசோதிமயமே, நின்ம

கிமைகண்டுளே தெண்டனிடுதொண்டர்தந் நினை
வுசற்றயராமலே,சத்தமாய்நின்றமணிரத்நவொளி
தீபமே தரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்த
சபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே (௧)

பொற்பிரபையாகியொரு வச்ரமலையுச்சியிற்பு
ன்னைமலர்ன்னமலரோ, பூத்தமலர் வாசனையினு
ற்றமலரூறுதேன் புன்னுனியின் மணிபோலவே,
நற்பவளவனையிலே யுற்பனமதாகவே நவில்கின்ற
நாதகுருவே, நாராயணாபநம வேதாவினோதநமந
ந்தசிவசாம்பசிவனே, சொற்பொருளிலாததோர்
கற்படிகரூபமாய்த் துய்யமதியாகி வெளியில், து
ரியமுதலாகாச வழிசிகரமணியோசை சொல்விம்
மிநின்றபரமே, தற்புருஷநிலையிலே விற்புருவநடு
விலே ஸ்தாபித்தசீர்பாதமே, தற்பராநந்தசபைநி
ஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே.........(௨)

ஒட்டாதுபாசவினை என்னாளு மின்னார்கள்போ
ணிசிறுகேணியளரில், உழல்கின்றபவமோகவெறி
கொண்டநிர்மூட ருடல்கெட்டுமுறிபட்டபின், கி
ட்டாதருந்தபசு முற்றாதிறங்குதுணை கேடுளவுவெ
குதூரமாம், கேசாதிபாதமலர் ஈராறுகால்கொண்
டுகீழ்மேலுமாராய்ந்துபார், எட்டாதுவெட்டவெ
ளி கொட்டாவி யிட்டசுழி யிடுகாடு சுடுபொட்ட
லாய், ஏகமொருகாலமழி யாதமாஜோதியொளிஎ
ல்லைநிலை சொல்லவெளிதோ, தட்டாதுநிஷ்டை

யிலு மெட்டாதவட்டமே தரல்வேண்டுமிதுசமய மே, தற்பரானந்தசபை நிஷ்களாநந்தசிவசச்சிதா னந்தகுருவே................ ............. .... (௩)

முற்றுமோமுத்திபெற வைக்குமோ சித்தமது முப்பாழின் முப்பதியின்மேல், மூதண்டகூடமு கடாய்நின் றநாதமே முனைசுழியிலணுவாகியே, வ த்துவாய்வித்திலொரு சித்தாசிரத்நமணி வந்தசிறு வாசல்வழியே, மடைவாயில்பட்சிபோ னடைடார் த்திராதுநீ மற்றென்னகற்றறிவையோ, சுத்தமாய் ஸ்தூலவுடல் வைத்தசீர்பாதமது சூக்ஷ்மாதி சூக்ஷ் மநடனம், தொண்டரிரு கண்கள்விழி கொண்ட ழகு கண்டபின்சொல்லேது பொருளேதுகாண், சற்றுமோகிட்டவிலை நெற்றிநேரிட்டசுழிதரல்வே ண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதானந்தகுருவே .... ........ ... (௪)

முக்கோண வட்டமொரு சிறுவீடுகட்டியதின் முன்னின்றம்ஜாதிவெளியின், முச்திசிவசத்தியாய் மத்தியமதியத்திலே முதலெழுத் தூன்றிநடுவே, உட்கோணவளையமாய் நாற்கோணமீதிலே யுசுவா சநிசுவாசமாய், ஊமையுயிராகமதி னமையுருவர் கியே யுண்மைகுரு வேட்டுவனுமாய், அக்கோலா வீதிமுத லாகாசமேன்மூலயாதாரபாதகமலம், ஆ ணிநடுமேருகிரி யூநிநடுமுடிவிலே யஷ்டாக்ஷரத்து விரிவாய்ச்; சட்கோணமுற்றிலொளி யட்பாலிருந்த

பதி தரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தச
பை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே (௫)

மூலமணிபூரக மனுகதம்விசுத்தியின் மூவிரண்
டாறுமனையாய், முச்சந்திவீதிநகருச்சம்பளிமொன்
னுமூடுதிரையாகுமதிலே, கோலமணிநாராச மே
லையொரு சிறுவாசல் கோழையறல் வேண்டுமன
மே, கோடிபலநூலறிவு வேதமுறைபேசினுங்கு
ருபாதம்வெளியாகுமோ, நீலமணியாபரண வால
குருசுவாமியார் நின்றநிலைகண்டதெவரோ, நேமி
சிவகாமிசர் வேசரிருதாளெனது நேராகநெஞ்சு
நடுவே, சாலமெனுமாமோக வேலையறவேஞான
சாயுச்ய பதமருளுவாய், தற்பரானந்தசபை நிஷ்
களானந்தசிவ சச்சிதாநந்தகுருவே .......... (௬)

சுந்தரசவுந்தரி நிறைந்தபரிபூரண சுயம்புபிர
காசவெளியில், சுத்தமயபடிகமாய் நித்யநவரத்ந
மாய்துண்டாத தீபவொளியாய், மந்திரசடாக்ஷ
ரவிலட்சணமுதற்செயல் வச்ரமயதற்சொரூபமா
ய், மகேசுர சதாசிவ சிதம்பரபரம்பர மனுமய
சிரோன்மணியனே, அந்தணர்டிரந்தரா னந்தரிஷி
யும்பருமனேதசிவயோகவிருளே, டாகமபுராண
கலை யோகிபதபோதனர்களடிதொழுதுகதியடை
யவே, சந்தனசுகந்தர சகந்தமரமிந்தபதி தரல்
வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்க
ளானந்தசிவ சச்சிதானந்தகுருவே ...... .... (௭)

அன்னமயஸ்தூலமா யுண்மையுயிராகமா யநுபோக தநுகரணமாய், அறிவுதருமுபதேச குருநமசிவாயமா யடிமைகுடிகொண்டபரனே, வன்னமலபேதவகை தன்னிலுழலாமலே மருவியிருபாதமருள்வாய், மதுராச கருணைமல ரொழுகுதிருகனகசபை வடிவாகியென்றனுளமே, சொர்ணமயமாகவளர் விண்ணினொளிதானான சோதிமதியாதிபதியே, சுக்கிலசுரோணித வகைக்கொரு விதைக்கருவி தோன்றுவது நீயாகையால், சன்னமயமாகவரு மின்னினொளிவேயறிவு தரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களாநந்தசிவ சச்சிதானந்தகுருவே..............................(அ)

அம்பரவிலாசமா யின்பசுகபோகமா யண்டபிரண்டவெளியாய், அகண்டநவகண்டமா யெண்டிசையனேகமா யளவாகிநின்றதொருவாய்ப், பம்பரமிதேதுசள சங்கடவிகாரநபவஞ்சவன மஞ்சுதொழிலாய், பழவினையி னுலெனது சடமெனவினைதவகை பகருமொரு பரமவனுவே, உம்பரறியாதபதி யெம்பவளவரையிலே யூன்றுதலையாருமறிவர், ஓநமசிவாயசிவ ஞானகுருதேசிகாவுண்மைகுடிகொண்டவடிவே, தம்பரமதாகிய சிதம்பரவிலாசமே தரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுரு()

விரிகின்றகருணைமல ருறைகின்ற சிவசோதிவிட்டகுறைதொட்டதெனவே, விதிலிகித மிதுவெ

ன்று மிதமகிதமறியாத விண்ணிறெளி கண்ணின
ளவாய்த், தெரிகின்ற தொருசிந்தை யறிகின்றதறி
வென்று தெளியாத விழிகுருடரோ, நினையளவு நி
னைவுசற் றபராமலங்களே தீய வொளிகாணவெளி
தோ, எரிகும்பிமலமாயை யறைதங்கிவருபாச மி
துவைந்து பொடியாகவே,இடியேறு தொனியோ
சை யடிமூலமுடிநாடி யேகாந்த வெட்டவெளியி
ல், சரியென்று நிலைநின்று பரிகொண்டு பெறுசிந்
தை தரல்வேண்டு மிதுசமயமே, தற்பரானந்தச
யை நிஷ்களானந்தசிவ சச்சிதாநந்த குருவே (௰)

செக்கரிளமதிவதன முக்கதிருமுக்கமல சிவகா
மிபுடனேசனே, சித்திதருவாயுனது முத்திபுரிவா
யெனது சிவஞானகுருதேசிகா, சொக்கமக மே
ருகிரி யுக்ரநடிவாகிமீப துணுகிநின்ற நடனம், சோ
திமனமாகியொரு நாதவெளி கீதமே தோன்றுவ
துபாதகமலம், மெய்க்கருணை பெருகிரச வர்க்க
மலமொழுகும்தேன் வெய்யசிவ துய்யகனியே,விட்ட
குறையனுபோகி தொட்டதிரு வெட்டிலே விரிச
த்திபுரிபக்ஷர, சக்கரமுமீராறு நிற்கவொரு மிக்க
வே தரல்வேண்டு மிதுசமயமே, தற்பரானந்தச
பை நிஷ்களானந்தசிவ சச்சிதாநந்த குருவே. (௰௧)

கொள்ளிக்குவிள்ளாத கூரிருளிலாகாசங் குறை
யுமோவெளிமறையுமோ, கூழுண்ட பாண்டமிது
நாளுண்டுபோவதோர் கூற்றனுயிருந்தைசமலமே,
வெள்ளிக்குயர்ந்தமதி வெண்ணிலவு தோன்றவே

வெளியாகிவழிகாணவும், விரவமிது தெளியாதகவலைசுடிகொண்டதொரு வீணைகாயமிதிலே, துள்ளிமுத்திரிகரண கள்ளப்புலன்பொறிகடுண்டகண்டிதமாகவே, தொந்தவினை தந்தவுடல் சுட்டுவிட வெட்டவெளி தொக்குதிலையொக்குமலையைத், தள்ளிச்சிறைக்குடிலை மெள்ளத் திறந்துசெயல் தரல் வேண்டுமிதுசமயமே, தற்பரா னந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே ......... (௰௨)

கட்டாதகாலிதெரு விட்டோடிமீளவரு கண்டுகொள்ளாதவிதமோ, கவலைமறைவிரிகொம்பு சிவலைமாக்காளைவெகு கடினமதுபிடிபடாது, தொட்டாலுமுட்டுமது கிட்டவர வொட்டாது சுழிபேதமுனைகூர்மையாம், சூக்ஷமிகுகால்கொம்பு பாய்ச்சலதுபாயாமல் துவாதசாந்தத்துவெளியில், மட்டாதநிஷ்டைமுறை சட்டுதுறை கிட்டுவது வரிகயிறு புரியெட்டினால், வையாளிபாயாமலுய்யவேகட்டுவிட மையமதுமெய்யுமிதுவே, தட்டாமல்தட்டிவரு காளையதுபாயாமல் தற்காத்து ரட்சிசமயம், தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே.......... (௰௩)

ஆடல்புரிநடனவிரு பாதபங்கயமேவது.மவதான சிவம்காணமாம், அருமறைபி லெட்டாத திருநடனவிஸ்தார மானதொருடானுமதியே, கூடவொரு திரிகோண வீடுதரு வனகோண கோணமிசை இசைநாலுமே, கோதையபிராமியிரு பாதவொலிநா

தமேகோடானகோடிநடனம், பாடல்ஞுகேதசபை
யோகசிவரோகவெனி பரமாயசத்திவடிவே, பார
மசமேருகிரி யூடுருவிமேலான பாலணையபாதக
மலம், சாடவனுபோகசெயலோமுதலாகவே தரல்
வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்க
ளானந்தசிவ சச்சிதானந்தகுருவே......... (௰௪)

திருமருவுசோதியாய்ப் பிரபையொளிவீசியே
தெருவிலொருபாதையதிலே, திரிகரணசுத்தியாய
முதகலசத்திலேதேனமுதமூறசுனை நீர், வருமொ
ருவர்காணவே திருகுசுழிகேணியில் வரவுசிறுவாச
றெளிவு, மயிர்ப்பாலமீதினி னெருப்பாறு தாவி
யே வந்தவழிகண்டதெவரோ, அருவுரு விலாகாச
மிருசரணகேதமே யனேகசிவ்சோதிநடனம், அப
யவரவுபயசிவ சமயகுருநாதனே யத்துவிதமுத்தி
பெறுவாய், தருபவுனசுழிமுனையி லனுவளவுகவ
னமே தரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்த
சபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே ()

முத்தரடிபரவுமிரு கமலபதமிதுவென்று முன்
னின்றஞானகுருவே, முனையாகிமூலமொரு களை
யாகிவெளியிலே முனையாகியே கவிரிவாய்ப், பித்
தவொருமித்தவிதி சற்றுமறிவார்களோ பெருமை
யழுதுசிறுமையதுவே பேசாதிருந்தசெய லாசானி
ருந்சபதிபேருருக்காணவெளிதோ, பாதரடிபணி
விடைக ளெத்தனையனேகசிவ பரமகயிலாசமலை

மேல், பகரவெறிகிரணவெளி விசிறிமதிபெருகு
நதிபதியிலகுசோதியதிலே,தத்திமதியத்தலைசுற்
றிவருசுத்திவழி தரல்வேண்டுமிதுசமயமே, தற்
பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகு
ருவே.............................................. (௰௬)

உனதுசெயலுனதறிவுனதுணர்வுனதுபொ
ருளுண்மை யுயிரானபரனே, ஊருனதுபேருன
தும்வருனதுதூறுநதிதோன்றும்வேறுனதிலையே,
எனதுடைய மெனதுசட மெந்நாளு மென்னுளைச
யெள்ளளவுதள்ளமுடியா,திப்படியிருந்தடிமையெ
ந்தவிதம்வந்தவழியீடேறவந்துமுடியும், மனது
மதிமனதுவெளி மனதொன்றிமனதன்றி மாசற்
றவாசமலரின், மாறுடிநின்றபரி யீராறுகால்கொ
ண்டு வானேறவிட்டபரனே, தனதுபதியிதுவெ
ன்றுமறிவுதருசிவசிந்தை தரல்வேண்டுமிதுசமய
மே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதா
னந்தகுருவே.............................. (௰௭)

ஒட்டிலேபட்டசிறு பட்சிபோலாகியே யுழல்கி
ன்றபேதைமனமே, உள்ளமேகோயிலொரு வள்
ளலேதாணுவா யுன்னைவிட்டகலாமலே, நெட்டி
லேதிரிகின்ற வட்டமிடுபரவிபோ னீங்காதகாலன
வனே, நீயதியமுற்றுமலோரறிவுகிட்டாம னீயேங்
கிநீமடிகிறாய், எட்டிலேரண்டிலே மட்டிலே கட்
டியேயீரெழுத்தோரெழுத்தால்,இசையாதமந்திர
மு மசையாதிருத்தியே யெல்லைபெற வல்லபெரி

யோர், தட்டிலேநிஷ்டைமுறை யிஷ்டமாய்நின்ற
படி தரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தச
பை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே (௰௮)

விடையேற்றுசடையாள ரடையாளமுடிசூட வே
ண்டுமெதுதாருமெனவே, விண்ணப்ப மொன்றுள
து கண்ணப்பனுருடைய மேலையூர்போது மென
வே, இடையூறுவாராது குடியேறவொருவீடதிப்
போது தப்பாமலே, யினியதொரு வாசமலர் மகி
மைதருநாசிமுனை யிருவழியு மொருசுழியிலே, க
டைகோடி மனையிலே யிடைவிடா ரகசியங் காட்
டொணுதந்தரங்கம், கனகசபை கொலுமேடைய
னவரதகல்யாணங்கண்கொளாதந்தநடனம், தடை
படாமகுடமுடி வடிவானகுருபரந் தரல்வேண்டு
மிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்த
சிவசச்சிதானந்தகுருவே.......................(௰௯)

பரமண்டலங்கனக சபைமண்டலம்படிகபதிம
ண்டலந்தவமதாய்ப், பரிவிண்டலம் புகுத மதிகு
ண்டலங்குழைகள் பணிகங்கணக்கிரணமே, உரம
ண்டலம்பெரிய தரமண்டலந்தெரிய வுபைபங்கன
ன்புபுரிய, ஒளிமண்டலந் தரிசு வெளிமண்டலம்
பெரிக யுதமண்டலஞ்சிரசதாய்ச், சிரமண்டலங்க
ளவை குடிகொண்டிலங்குசடை சிவசம்புசாம்பசி
வனே, ஜெகமண்டலம்புகழ ரவிசப்பரமங்களொ
டு திருவம்பலம்பரவவே, சரமண்டலங்களொடு ந

டனம்புரிந்தகழல்தரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபைநிஷ்களானந்தசிவசச்சிதானந்த.()

நந்தி நாதப்பரா விந்தநாதத்து கலை நம்பினேனெப்பொழுதுமே,நண்பனருட் கருணைபொங்கியேமெய்க்கமல நன்றுபாலிக்கவருமே, இந்திராதித்தருட னந்தமூலப்பொருளை யின்பசாரசமதுரமாய், எந்தவேளைக்கறிவு வெந்தவேளைக்குதவியென்றுபோதித்தருளுவாய், திந்திசாதிரகுதிகு சந்ததாளத்திநெடுசெஞ்சாடநிர்த்தநடனம், செப்பொன்மேருக்கிரியி னின்பமாமுத்திதரு சிந்தையாயற்றகுருவே, சந்திராதித்தரிகு விந்து நாதத்தொனியின் தங்குபரதற்பிரமமே, தற்பரானந்தசபை.()

வானுகியேகமொரு காலாகிலோகமாய் வகைநாலுவேதவிரிவாய், வடிவுபல்ரூபமாய்நிலைசராசரமுமாய் வந்தவதரித்தபொருளே, யானுநீயுமொருதாயர்கிவாசமலராணுவாகியெனை நீயுமே, அன்றுமுதுவிட்டநீ யென்றறியமுற்றுமோ வபிடேகமுடிமீதிலே, தேனுகிமேருகிரி பாலானபாதமதுதெரிசிக்கவெதிர்நிற்குமே, சித்தகயிலாசகோலு நாதவொயிலானதொரு சிவசிவாதீபவொளியே, தானுகிமூலமுத லாதாரபாதமே தரல்வேண்டு மிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவசச்சிதானந்தகுருவே.............................(௨௨)

நீரூபமாகியொரு காரண கடாட்சமாய் நெறிமுறமைதவருமமே, நினைவுதருமுபதேச !வறிவுசி

வகுருவாக நேசமறவாதபொருளே, மாரூபரூப
மென ரோணாவெளிவொளியிலே வாசுகிடனுமகு
டமேல், வரவேண்டுமிருபதம் பெறவேண்டுமடி
யேனிமகமேரு வடகிரியையே, கீருடவாசமல
ரோநவசிவாயமேதேவாரதிருவாசகா, சிந்தைகுடி
கொண்டருளுமென்றனிடசுவாமியேசிவஞானப
ரிபாலனே, சாரூபசாயுச்சிய பாதாரவிந்தமே தர
ல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்க
ளானந்தசிவ சச்சிதானந்தகுருவே......... (௨௫)

கணப்போது பிரியாத குணப்பூத வகையாற்க
லைப்பாலு மலைப்பாகவே, கருவிபலசரணு திபிரிவு
பொரிபுலனுசை கைமீறி மெய்மாறினால், அனை
ப்பாதைநடப்போது விருப்பானதிருப்பாத மனு
ப்போல் வரப்போகுதோ, அமுக்கான மலக்காடு
செடித்தூறுவிலக்காதவடிப்பாரிசிறுபாதைகாண்,
துணைப்போகமுடியா திளைப்பாறநிலையாது சொ
லக்கேளுமனக்காமியே, துடுக்கானதலைக்காவனெ
ருப்பாறு மயிர்பாலஞ் சுறுக்கானபெருக்காறுசா
ண், க்ஷணப்போதுதனைத்தேடு கருப்பூரதீபமேத
ரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபைநிஷ்
களானந்தசிவ சச்சிதானந்தகுருவே.........(௨௬)

முனையாடுசுழியாது தனையேறவழியேது முடி
கூடுதுறையேபதுகாண், முதுஞானிகனியூரல் கதி
ரோனுமறியாத முனைமீதிலணுவாகியே, தினையா

னொருரோனு வரலாறுமிணையான சிவரூபவிபரீ
தமே, தெரியாதிதெவராலு மரிதானவெளிமாயை
திருமூலர்தாமுமறியார், வினையூறுமலநாறு பழு
வானவினைகூடி வினையாடியலைபோதியே, விழுகா
யமுதுமாய மறியாமலுறவாடி விதிமோசமதிமா
யையார், தலைபாயவறியாத வெனைநீயுமறவாதுத
ரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபை நிஷ்
களானந்தசிவ சச்சிதானந்தகுருவே ... ....(௨௫)

சிவகிருபை சிவமகிமை யறிவுதனையறியாதசெ
னனமது தனையறுது, திருநடனபரிபால நடனச
பை பொயிலானதிரிநயன மழுமானுமாய், நவநி
னைவு பலவான மனதுதனை யறமோதி நடுவனையி
நடுமனையிலே, நளினமல ரணைபெருகுசிறுகுமிரு
துளியருளி நாயேனை யாளநினைவாய், இவனொரு
வனவனென்று தனையறியநாளில்லையேகமுதலாகா
யமே, இருமதியுமொருமதியில் வருமளவுதவறும
விரவுபகலரவமதிலே, தவமகிமை நினையான கதிய
டைய விருபதந் தரல்வேண்டுமிதுசமயமே, தற்
பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதா (௨௬)

அபனொருவ னரியொருவ னறனொருவ னுகவி
ம்மூவரையுமன்பாகவே, அருளுமொரு குருசுவா
மியிவிடமலவெகுதூர மதுவறியவெகு வருஷமா
ய், வியனுலகு தெரியாத ரகசியமிதாரறிவர்விரிக
மல்சுருதிமுடிவு, விடவுபயிர்முனைபுகுத விடமு

மொரு துகளளவுமிடைவிடாதேகவெளியில், பய
னுதவதவதான பதியருளுமினிதான பரமகுருநா
தசிவனே, பதியணுகுபசுபாச வினையகலவிடல்
கொண்டுபடிகமயதவளவடிவே, சயனமொருமல
ரணையிலொலிநடனமணியோசை தரல்வேண்டுமி
துசமயமே, தற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ
சச்சிதானந்தகுருவே..... ... ........ ........(௨௭)

பகலிரவுமதியிரவி வருதிசைக ளுலகுவெளிப
ரமவனு பனிபளவுமாய்ப், பகருமொருவிவரமிஃ
தெவருமறி யாதசெயல் பவுரிகயிலாசமெனவே
உகமுடிவுதினையளவு தனையறியமுனை பெரியதுற
திவழியறுதிநிலையார், உதயமிருபரசரண கிரணம
ணிகலகலென வரசபட நடுமுடியிலே, அகமகிழ
வருபரம குருநமசிவாயனே யத்துவிதமுத்திபுரி
வாய், அழகுதிருமணிமகுட முடிசடையுமறிமழு
வுபயவரவு மபயமுடனே, சகலகலையமிர்தகுணவி
கிதநபரிஷபவிடை தரல்வேண்டுமிதுசமயமே, த
ற்பரானந்தசபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்
தகுருவே.....................................(௨௮)

நாலுமறைபறியாத யோகபரவெளியிலே ராக
மனுராகதொனியாய், நாசிநுனி நடுவாகிவாசியிடை
கடையாகி நாதகயிலாசவெளியில், காலுகலையது
வாகி யேறுதுறைமுறைகூறு காசிநகருசிதிருவம்,
கதலிவனமிடுகாடு படுகுழிகள்சிறுபாதை கடுவெ

ளியிலாவுநெளிவு, போலுமதுவிருலான மூடுதிரை
யறவீசு போருமதுசாமவெகுளி, பூதபொறிபுல
ஞுசை யேதுமிலைநிலையாது புருவநடு மதியடைய
வே, சாலுமிதுபாலுநெய்ப்போலுமது தெளியவே
தரல்வேண்டுமிதுசமயமே, தற்பரானந்தசபை நி
ஷ்களானந்தசிவ சச்சிதானந்த குருவே...... (௨௧)

பரமுமிது பொருளுமிது வழியுமிது தெளிவு
மிதுபதிஞலு லோகமிதுவே, பாசவினையாலென
துமோகமேமோசமிது பாழுறவுபாழானதே, உ
ரமுமிருகாலோசை யிரவுபகலன்றியே யுட்சராச
ரமுமதிலே, ஒளிவெளியி லொளியாகி யுபநிடதந
டனமா யூழிவிதியாழியெனவே, சிரமதுட முடியி
லே கனகமணியிசையிலேசிவஞானதீபமதுபார்,
திருமருவுசிவசோதிமதிபெருகுகதிவீடுதெரிசனை
களாகிமுடியும், சரமுமதுபதிசேவை சகலகலைய
னுராக சாயுச்சியபாதமருள்வாய், தற்பரானந்தச
பை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்த குருவே ..()

சச்சிதானந்தமென்னுந் தன்மையைமகிழ்ந்து
கேட்போர், உச்சிமேற்பார்வையாகி யுள்வெளிதி
றந்துமுப்பாழ், வச்சிரவொளியுந்தாண்டி மகிழ்ந்
தொருவாசல்கண்டு, நிச்சயநிஷ்களத்தே நிராமய
ச்சோதிசேர்வாம் ...................................... *

சச்சிதானந்தமாலை - முற்றிற்று.